இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பள்ளிக் கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டம் - 2017/ 2018

**ESC 1233 / EPC1533** குழந்தை உளவியல்

காலம் : 3 மணித்தியாலங்கள்

---

திகதி : 23.04.2019 நேரம் மு.ப 09.30 - நண்பகல் 12.30

---

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி I

1. "மனித விருத்தியில் உடல்சார் விருத்தியானது ஒரு முக்கியமான அம்சமாகும்." உடல்சார் விருத்தி என்ற பதத்தின் கருத்து என்ன என்பதை விளக்குக.

2. பிள்ளை விருத்தி பற்றி ஓர் முன்பள்ளி ஆசிரியர் கற்பதன் அனுகூலங்கள் ஐந்தினை (05) எழுதுக.

3. பிறப்பிற்கு முன்னதான விருத்தியானது மூன்று (03) நிலைகளில் பிரித்து ஆராயப்படுகின்றது. அம்மூன்று கட்டங்களையும் பெயரிடுக.

4. பிள்ளையின் சுயசரிதைப் பதிவேடானது பிள்ளை பற்றிய கற்றலுக்குப் பெரிதும் பயனுள்ளதாகும். சுயசரிதைப் பதிவேடு என்றால் என்ன என்பதை விளக்குக.

5. நான் எனும் முனைப்பு என்பதால் நீங்கள் கருதுவதை உதாரணங்களை முன்வைத்து சுருக்கமாக விளக்குக.

6. புதிதாகப் பிறந்த பிள்ளை ஒன்று கொண்டிருக்கும் இயலுமைகள் ஐந்தினை (05) குறிப்பிடுக.

7. உளவியக்க ஆற்றல்கள் என்றால் என்ன என்பதை விளக்குக?

8. ஒரு பிள்ளையில் புலக்காட்சி எவ்வாறு நிகழ்கின்றது என்பதை உதாரணங்கள் முன்வைத்து விளக்குக?

**(05X08= 40** புள்ளிகள்)

## பகுதி II

9. i) ஒரு பிள்ளையின் 'ஆளுமையின் முழுவிருத்தி' என்பதால் நீங்கள் கருதுவதை விளக்குக?

(10 புள்ளிகள்)

ii) 'பிள்ளை பற்றிக் கற்கும் நுட்பங்களில் "அவதானம்" மிக முக்கியமானதாகும்'. நீங்கள் இக்கூற்றினை ஏற்கிறீர்களா? உங்களது பதிலுக்கான காரணத்தை முன்வைக்குக.

(10 புள்ளிகள்)

10. i) 'அசாதாரண நடத்தை' எனும் பதத்தைச் சுருக்கமாக விளக்குக?

(02 புள்ளிகள்)

ii) பிள்ளைகளிடம் காணப்படும் அசாதாரண நடத்தைகள் மூன்றினைக் (03) குறிப்பிடுக?

(06 புள்ளிகள்)

iii) பிள்ளைகளின் அசாதாரண நடத்தைக்கு காரணமாக அமையும் காரணிகள் மூன்றினைப் (03) பெயரிடுக.

(06 புள்ளிகள்)

iv) நீங்கள் மேலே குறிப்பிட்ட காரணிகளில் ஏதேனும் ஒன்றைத் தெரிவுசெய்து அது பிள்ளையின் அசாதாரண நடத்தைக்கு எவ்வாறு காரணியாக அமைகின்றதென்பதனை விளக்குக?

(06 புள்ளிகள்)

11. i) பிள்ளையின் பிறப்பிற்கு முன்னதான விருத்தியில் தாக்கம் செலுத்தும் சூழல்சார் காரணிகள் மூன்றினைப் (03) பெயரிடுக.

(03 புள்ளிகள்)

ii) நீங்கள் மேலே குறிப்பிட்ட காரணிகளில் ஒன்றைத் தெரிவுசெய்து அதன் எதிரான பாதிப்புக்களை விளக்குக?

(05 புள்ளிகள்)

iii) புதிதாகப் பிறந்த குழந்தையின் உடல்சார்ந்த அடிப்படைத் தேவைகள் நான்கினைப் (04) பெயரிடுக?

(04 புள்ளிகள்)

iv) சிசுப்பருவத்தில் ஏற்படும் நுண்ணறிவு விருத்தியை விளக்குக?

(08 புள்ளிகள்)

12. i) பியாஜேயின் கோட்பாட்டின் அடிப்படையில் நான்கு (04) அறிவு விருத்திப் பருவங்களையும் பெயரிடுக?

(04 புள்ளிகள்)

ii ) பிள்ளையின் ஒழுக்க விருத்தி என்பதால் நீர் கருதுவது யாது?

(04 புள்ளிகள்)

iii) பியாஜே மற்றும் சிக்மன் புரொயிட்டின் நோக்கில் ஒரு பிள்ளையின் ஒழுக்க விருத்தி பற்றிய கருத்துக்களை ஒப்பிட்டு விளக்குக?

(12 புள்ளிகள்)

13. i) முன்பிள்ளைப்பருவ பிள்ளைகளிடம் காணப்படக்கூடிய பொதுவான மனவெழுச்சிக் கோலங்கள் நான்கினைப் (04) பெயரிடுக?

(04 புள்ளிகள்)

ii ) நீங்கள் மேலே குறிப்பிட்ட மனவெழுச்சிக் கோலங்களில் எவையேனும் இரண்டினை (02) உதாரணங்கள் முன்வைத்து விளக்குக?

(06 புள்ளிகள்)

iii) முன்பிள்ளைப்பருவ பிள்ளைகளில் நேரான மனவெழுச்சிக் கோலங்களை விருத்தி செய்வதில் ஒரு முன்பள்ளி ஆசிரியர் எவ்வாறு தலையீட்டை மேற்கொள்ளலாம் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது